**இந்நாள்**

- விசுவாவசு வருடம் வைகாசி மாதம் 4-ம் நாள். ஞாயிற்றுக்கிழமை. தேய்பிறை.
- திதி: பஞ்சமி காலை 5.58 மணி வரை; பிறகு சஷ்டி.
- நட்சத்திரம்: உத்திராடம் மாலை 6.52 மணி வரை; அதன் பிறகு திருவோணம்.
- யோகம்: அமிர்த யோகம்
- நல்ல நேரம்: காலை 7.30 - 8.30; மாலை 3.30 - 4.30 மணி வரை.
- ராகு காலம்: மாலை 4.30 - 6.00 மணி வரை.
- எமகண்டம்: மதியம் 12.00 - 1.30 மணி வரை.
- சந்திராஷ்டமம்: திருவாதிரை, புனர்பூசம்.
- சூலம்: மேற்கு; பரிகாரம்: வெல்லம்.

**வானிலை**

| | இன்று | | நாளை | |
|---|---|---|---|---|
| | அதிகபட்சம் | குறைந்தபட்சம் | அதிகபட்சம் | குறைந்தபட்சம் |
| | 36.0 C / 96.8 F | 30.0 C / 86.0 F | 35.0 C / 95.0 F | 30.0 C / 86.0 F |

இன்று லேசான மழை பெய்யும்.

கனவு இல்லம் கட்டும் பணி கலெக்டர் ஆய்வு பக்கம் 14

635 பள்ளி வாகனங்கள் ஆய்வு பக்கம் 16

## நீதிமன்ற உத்தரவுப்படி

# 484 கிலோ புகையிலை பொருட்கள் தீ வைத்து அழிப்பு

**அவிநாசி,மே18:** அவிநாசி அருகே நீதி மன்றஉத்தரவுப்படி, 484 கிலோ குட்கா புகையிலை பொருட்களை குன்னத்தூர் போலீசார் நேற்று தீ வைத்து எரித்து முற்றிலும் அழித்தனர்.

தமிழக அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை குட்கா,புகையிலை பொருட்களை கடந்த 2023ம் ஆண்டு 296 கிலோ மற்றும் 2024 ஆண்டு 188 கிலோ காரில் சிலர் கடத்தி வந்தனர். குன்னத்தூர் போலீசாரால் வாகன தணிக்கையின் புகையிலை பொருட்களை பறிமுதல் செய்தனர். இதன் மொத்த எடை 484 கிலோ ஆகும்.இது குறித்து வழக்குப்பதிவு செய்யப்பட்டு குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனர். இது தொடர்பான வழக்கு ஊத்துக்குளி நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இதையடுத்து நீதிபதி தரணிதர் உத்தரவின்பேரில், குன்னத்தூர் போலீஸ் இன்ஸ்பெக்டர் சுசீலா, உணவு பாதுகாப்பு துறை அதிகாரி இளங்கோ, கிராமநிர்வாக அலுவலர் சரவணன், பேரூராட்சி செயல்அலுவலர் பாலசுப்பிரமணியம் ஆகியோரின் முன்னிலையில், குன்னத்தூர் பேரூராட்சிக்கு உட்பட்ட நவக்காடு பகுதியில் உள்ள குப்பைக்கிடங்கில் பொதுமக்களுக்கு இடையூறு எதுவும் இல்லாமல் பாதுகாப்பான முறையில் அதை முற்றிலும் தீ வைத்து எரித்து அழிக்கப்பட்டது.



அவிநாசி அருகே 484 கிலோ குட்கா புகையிலை பொருட்களை குன்னத்தூர் போலீசார் நேற்று தீ வைத்து எரித்து அழித்தனர்.

## தெற்கு தாலுகா அலுவலகத்தில்

# சிறப்பு ஆதார் முகாம் இன்று நடக்கிறது

**திருப்பூர்,மே18:** திருப்பூர் மாவட்டத்தில் உள்ள பொதுமக்கள் ஆதார்களில் உள்ள திருத்தங்கள் மேற்கொள்ள ஆதார் மையங்களுக்கு சென்று வருகிறார்கள்.அங்கு அவர்களுக்கு தேவையான திருத்தங்கள் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. இதற்கிடையே வாரந்தோறும் ஆதார் மையங்கள் செயல்பட்டு வருகின்றன. ஞாயிற்றுக்கிழமை ஆதார் மையங்களுக்கு விடுமுறை ஆகும்.

இதற்கிடையே பள்ளி மாணவ மாணவிகள் மற்றும் வேலைக்கு செல்கிறவர்களுக்கு வசதிக்காக வாரந்தோறும் தாலுகா அலுவலகங்களில் செயல்பட்டு வருகிற ஆதார் மையங்கள் சுழற்சி முறையில் ஞாயிற்றுக் கிழமைகளில் செயல்பட்டு வருகின்றன. அதன்படி இன்று (ஞாயிற்றுக்கிழமை) செவந்தாம்பாளையத்தில் உள்ள தெற்கு தாலுகா அலுவலகத்தில் சிறப்பு ஆதார் முகாம் நடைபெறுகிறது. இதில் ஆதார் திருத்தம், செல்போன் எண் மாற்றம், முகவரி மாற்றம் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ளலாம் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.




